பருத்திக்கண்மாய் ஊராட்சி மன்றத் தலைவர் செயலாணைகள்
முன்னிலை: திரு.A.ஜவஹர் ராயன்.

ந.க.எண்/ 05 / 2023-24 நாள்: 02.02.2024.

பொருள்: மனைப்பிரிவு - சிவகங்கை மாவட்டம் - காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் பருத்திக்கண்மாய் ஊராட்சி - புரசடிஉடைப்பு குரூப் புல எண்கள் 98/1A1A மற்றும் 98/1A2A-ல் 1940 சதுர மீட்டர் (48 செண்ட்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அனுமதி / இறுதி ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் ROC No. UXZ0IV6U/2023/TCP நாள்: 08.12.2023.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் L.P(SWP) / DTCP / SIVAGANGAI / LAYOUT அனுமதி எண். 144/2023 நாள்: 08.12.2023.
3. அரசணை நிலை எண்: 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3). நாள்: 04.05.2017
4. மனுதாரர் திருமதி.ரெஜினாமேரி க/பெ. சேசு 300, புலிக்கண்மாய் அவர்களின் விண்ணப்பம் நாள்: 10.01.2024.
5. பருத்திக்கண்மாய் ஊராட்சி மன்றம் ந.க.எண். 05/2023-24 நாள்: 02.02.2024.

******

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புரசடிஉடைப்பு குரூப் புல எண்கள் 98/1A1A மற்றும் 98/1A2A-ல் 1940 சதுர மீட்டர் (48 செண்ட்) மொத்த பரப்பளவில் ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 10 (1512.77 சதுர மீட்டர்) ஆகும். பார்வை 1 மற்றும் 2-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படியும், மனைப்பிரிவிற்கு கோரப்பட்டுள்ள நிபந்தனைகளின் படியும், மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளையும், உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான காளையார்கோவில் சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திரம் எண். 6512/2023 நாள்: 28.11.2023 மற்றும் மின்சாரவாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான காளையார்கோவில் சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திரம் எண். 6513/2023 நாள்: 28.11.2023 ஆகிய அசல் ஆவணங்களை பருத்திக்கண்மாய் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் 10.01.2024 அன்று மனுதாரர் ஒப்படைத்துள்ளார்.

மேலும் பார்வை 3-ல் கண்டுள்ள அரசணையின்படி மனுதாரர் மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) பருத்திக்கண்மாய் ஊராட்சியிலும், நில உபயோக மாற்ற கட்டணமாக நில மதிப்பில் 3% வீதம் ரூ.2,280/- (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்று என்பது மட்டும்) அரசு தலைப்பில் செலுத்தியதற்கான நகல் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் கொடி நாள் நிதியாக நன்னிலை வரிக் கட்டணத்தில் 20 சதவீதம் தொகையான ரூ.3000/-ஐ ARMED Rorce Day Fund என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில்

வரைவோலை பெறப்பட்டு நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிவைத்து அதற்கான நகல் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.1260/2021 சி.மா.2 நாள்: 06.10.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் L.P(SWP)/DTCP/SIVAGANGAI/ LAYOUT அனுமதி எண் 144/2023 நாள்: 08.12.2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் புரசடிஉடைப்பு குரூப் புல எண்கள் 98/1A1A மற்றும் 98/1A2A-ல் 1512.77 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனையிடங்களுக்கு மனைப்பிரிவு அனுமதி வழங்க ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட மனையிடங்களில் பத்திரப்பதிவு செய்வதற்கு ஊராட்சிக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

A. Jawahar Rayan
தலைவர்
ஊராட்சி மன்றம்
பருத்திக்கண்மாய்

பெறுநர்:

திருமதி. ரெஜினாமேரி,
க/பெ சேசு,
300, புலிக்கண்மாய் அஞ்சல்,
பருத்திக்கண்மாய் ஊராட்சி,
காளையார் கோவில் வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

நகல்:

1. சார் பதிவாளர்,
   சார் பதிவாளர் அலுவலகம்,
   காளையார்கோவில்.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
   மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சிவகங்கை.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
   காளையார் கோவில்.